**ஆக்கரபதன பிரதேச சபை - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆக்கரபதன பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆக்கரபதன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனமொன்றினுள் ஓராண்டில் இடம்பெறும் சகல கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களின் மீதிகள் மற்றும் சொத்துக்கள் பொறுப்புகள் மீதிகள் குறிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பரீட்சை மீதி தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும் சபையால் சொத்துக்கள் பொறுப்புக்கள் மீதிகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டு பரீட்சை மீதி தயாரிக்கப்பட்டிருந்தது. | குறைபாடு ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் இவ்வாண்டிலிருந்து பரீட்சை மீதி சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பரீட்சை மீதி சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மீதி ரூபா 2,470,399 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட 14 சொத்து விடயங்களில் உள்ளடக்கப்பட்ட 45 அலகுகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறைபாடு ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் எதிர்காலத்தின் போது இனங்காணப்பட்டு கணக்குகளில் உள்ளடக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது | சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆம் ஆண்டின் போது நோர்வுட் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த ஆயுர்வேத இருப்பின் பெறுமதி ரூபா 240,000 தொகை சபைக்கு அறவிடப்படாது இருந்ததுடன் அது நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய தொகையாகவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,514,359 ஆன சொத்துக்களும் ரூபா 495,313 ஆன பொறுப்புக்களும் என 02 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 5,009,672 குறைத்துக் காண்பித்தும் வருமானம் 77,800 தொகை செலவினம் ரூபா 24,138 மற்றும் ரூபா 111,493 பொறுப்புக்களாக 04 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 213,431 கூடுதலாக காண்பிக்கப்பட்டும் இருந்தன. | 2022 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட ஐந்தொகை குறித்த அட்டவணைகளின் பிரகாரம் 04 கணக்கு விடயங்களில் ரூபா 808,863 ஆன மீதியொன்று காணப்பட்டது. | குறைபாடுகள் ஏற்றுக்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது | கணக்கு மீதிகளில் வேறுபாடு தொடர்பாக ஆராய்ந்து உரிய அட்டவணைகள் அல்லது நிதிக் கூற்றுக்கள் சீராக்கப்பட வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,579,585 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,099 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| சபையில் சட்டத்தின் (1) 158 ஆம் பிரிவின் பிரகாரம் இரண்டாம் காலாண்டில் நிலுவையாக உள்ள ஆதனங்கள் தொடர்பாக பட்டியல் தயாரிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் வரி கொடுப்பனவு செய்யுமாறு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாத 19 பிரதேசங்களில் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 1,191,230 ஆன வீத வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த ஆதன உரிமையாளர்களுக்கு வீதவரி கொடுப்பனவு செய்யாமை தொடர்பாக ஆதனங்களைத் தடை செய்யும் அறிவித்தல் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மெராயா ஆயுர்வேத மற்றும் நூலகம் அமைந்துள்ள காணியில் முன்பக்க பகுதி வெளித்தரப்பினரால் கையேற்கப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை நூலகத்தைத் திறந்து வைப்பதற்கு முடியாதிருந்தது. நூலகக் கட்டிடத்தின் இரண்டு அறைகள் ஆயுர்வேத வைத்தியரினதும் பொதுச் சுகாதார பரிசோதகரினதும் பாவனைக்கு ஈடுபடுத்தப்பட்டு இருந்ததால் பொது நூலகத்தில் இருந்து நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் பிரதேசவாசிகளுக்குக் கிடைக்கவில்லை. அவ்வாறே நூலகத்திற்குச் சொந்தமான அதிகளவான புத்தக இருப்பொன்றும் உபகரணங்கள் இருப்பும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன | கூடிய விரைவில் குறித்த இடத்தை அளவிட்டு சபைக்கு சொந்தமான காணி அளவு இனங் காணப்பட்டு வெளியீட்டு உறுதி தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் அதன் பின்னர் ஆதனங்கள் தொடர்பாக வெளித்தரப்பினரால் அத்துமீறிய கைப்பற்றல் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களுக்காக உறுதிகள் தயாரிக்கப்பட்டு சபை ஆதனங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.அவ்வாறே நூலகம் மற்றும் ஆயுர்வேத நடாத்திச் செல்லப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2020 செப்தம்பர் 05 ஆம் திகதி விபத்துக்குட்பட்டிருந்த டொயோடா லேன்ட் குருஷர் வண்டி திருத்தம் செய்யப்படாமல் கணக்காய்வுத் திகதியான 2022 ஜனவரி 31 ஆம் திகதி வரை 01 ஆண்டு 3 மாதங்களுக்கு அண்மித்த காலம் வரை கடந்திருந்தது. அவ்வண்டியைத் திருத்தம் செய்வதற்குத் தனியார் கராஜ் ஒன்றிற்கு அனுப்பி தலைவரின் பிரயாணத்திற்காக வாடகை வண்டி ஒன்று ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 1,456,000 ஆன கூலி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வாகன திருத்த வேலைக்கு மதிப்பீடு ஒன்றை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி வாகனத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை ஆரம்பிக்கப்பட்டு 05 ஆண்டு காலப்பகுதி கடந்திருந்த போதும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காகப் பொருத்தமான காணியொன்றைத் தெரிவு செய்து கொள்வதற்குப் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அத்துடன் 2021 ஆம் ஆண்டின் போது 104 மெட்ரிக் தொன் உக்காத கழிவுப் பொருட்கள் தலவாக்கலை நகரசபையின் கழிவுப் பொருள் பிரிவுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. அவ்வாறே 02 தொன் உக்காத கழிவுகள் நிலத்தினை நிரப்புவதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது. கழிவுப் பொருட்கள் முகாமைத்துவத்திற்காக சம்பளம் மற்றும் மேலதிக நேரமாக 07 ஊழியர்களுக்கு ரூபா 5,606,746 செலவழிக்கப்பட்டு இருந்ததுடன் கழிவுப் பொருள் போக்குவரத்து செய்த உழவு இயந்திரத்திற்காக எரிபொருள் மற்றும் திருத்தச் செலவினமாக ரூபா 229,100 செலவிடப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலத்தில் உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களுக்கு நிரந்தரமாக பொருத்தமான கழிவுப்பொருட்கள் பிரிவொன்று பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதால் அதன் பின்னர் முறையான வேலைத்திட்டம் ஒன்று மற்றும் திட்டமிடலின் பிரகாரம் கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்கும் வெளியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |